# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● சனவரி 6, 2018

Weekly E-paper ● January 6, 2018





## ரஜினியின் "ஆன்மிக" அரசியல்!

● சுப.வீரபாண்டியன்

**20** ஆண்டு கால ஊசலாட்டத்திற்குப் பிறகு, சென்ற ஆண்டின் கடைசி நாளில், தன் அரசியல் நுழைவை நடிகர் ரஜினிகாந்த் உறுதிப்படுத்தியுள்ளார். "சாதி மத பேதமற்ற, ஆன்மிக அரசியல்" தன்னுடையது என்று அறிவித்துள்ளார். ஆன்மிக அரசியல் என்னும் தொடர், எதிர்ப்பிற்கு உள்ளானபின், அதற்கு 'நேர்மையான அரசியல்' என்றுதான் பொருள் என விளக்கம் கொடுத்துள்ளார். நாம் வைத்திருக்கும் அகராதி எதிலும், ஆன்மிகம் என்றால், நேர்மை என்று பொருள் இல்லை.

அவர் அறிவிப்புக்கு முன் அவரைச் சந்தித்து அரசியல் குறித்து உரையாடியதாகச் சொன்னவர்களில் தமிழருவி மணியனும், இந்து மக்கள் கட்சி அர்ஜுன் சம்பத்தும் முதன்மையானவர்கள். ரஜினியின் உரை, வருணாசிரம தர்மத்தை உயர்த்திப் பிடிக்கும் கீதையிலிருந்து தொடங்கிற்று. அவர் விரல்களை உயர்த்திக் காட்டியது பாபாவின் முத்திரை. அறிவிப்புக்கு மறுநாள் அவர் முதலில் 'ஆசிர்வாதம்' வாங்கியது மைலாப்பூர் ராமகிருஷ்ண மடத் தலைவரிடம்!

இத்தனைக்கும் பிறகு, ரஜினியின் ஆன்மிக அரசியலுக்கு என்ன பொருள் என்பது எவர் ஒருவருக்கும் விளங்கும். இந்த ஆன்மிக அரசியலுக்குப் பின்னால் உள்ளவர்கள் யார் என்பதும் புரியும்.

ஆன்மிக அரசியல் தமிழ்நாட்டில் திராவிட அரசியலை வென்றுவிட முடியாது என்றாலும், அந்த மிதப்பில் நாம் இருந்துவிடக் கூடாது. ரஜினியின் ஆதரவுக்கு வாய்ப்பாக உள்ள சில கூறுகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

"ஐம்பதாண்டு திராவிட ஆட்சியில் நாடே கெட்டுவிட்டது, இனிமேல் திமுக, அதிமுக இரண்டுமே வேண்டாம், ஒரு புதிய மாற்று வேண்டும்" என்னும் பரப்புரை இங்கு தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. இதில் உள்ள நஞ்சான உள்நோக்கத்தை அறியாமல் அப்படியே இதனை நம்புகிறவர்கள் இங்கு உண்டு. அவர்களின் வாக்குகள் திசை மாறிச் செல்ல வாய்ப்புண்டு.

முதலில் ஐம்பதாண்டு காலத் திராவிட ஆட்சி என்பதே தவறானது. திராவிட இயக்கத்திற்கும், ஜெயலலிதா, எடப்பாடி போன்றவர்களுக்கும் என்ன தொடர்பு? இது திமுக பதவியேற்ற ஐம்பதாவது ஆண்டுதானே தவிர, ஐம்பது ஆண்டு கால ஆட்சி இல்லை. கடந்த ஐம்பது ஆண்டில் தமிழகத்தில் வளர்ச்சியே ஏற்படவில்லை என்பதும் எவ்விதத்திலும் உண்மையில்லை.

மேலும், இரு கட்சிகளையும் சேர்த்துச் சேர்த்துச் சொல்வது, தங்களை நடுநிலை என்று காட்டிக் கொள்வதற்காக மட்டுமே. அவர்களின் உண்மையான நோக்கம் திமுகவை அழிப்பது மட்டுமே. திமுக எதிர்ப்பு என்ற புள்ளியில், மதவாத, சாதிய, தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர்.

அவர்களின் சார்பாளராகவே ரஜினி முன்னிறுத்தப்படுகிறார். அழிக்க நினைக்கிற இடத்துக்கே வந்து ஆசிர்வாதம் கேட்கிறார் ரஜினி.

வேரும் விழுதுகளும் உள்ள இயக்கம் திராவிட இயக்கம் என்பதை அவருக்குக் காலம் உணர்த்தும்!

●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## நாத்திகம்



**05.01.2018** அன்று திருச்சியில் தொடங்கிய உலக நாத்திகர் மூன்று நாள் மாநாட்டின் தொடக்க விழாவில், தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.இராசா, தோழர் சுப.வீரபாண்டியன், வெளிநாட்டு விருந்தினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கொடை



**சென்னை** முகப்பேர் பகுதியைச் சேர்ந்த பெரியவர் இளங்கோ குடும்பத்தினர், திராவிடத் தமிழர் அறக்கட்டளைக்கு ரூ.20 ஆயிரம் நன்கொடையாக வழங்கியபோது...

## இரங்கல்



**தி.இ.த.** பேரவையின் தஞ்சை மாவட்டச் செயலாளர் பேராசிரியர் சாமி அவர்களின் தாயார் மறைவுக்குத் தோழர்கள் சுப.வீரபாண்டியன், புண்ணியமூர்த்தி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## இஸ்லாமியப் பெண்கள் மீது எவ்வளவு கரிசனம்!



**இ**ந்துமதவாதக் கட்சியான பாஜகவிற்குத் திடீரென்று இஸ்லாமியப் பெண்களின் மீது அளவுகடந்த பற்றும் பரிவும் ஏற்பட்டு விட்டது. எனவே அவர்களைக் காப்பாற்ற, 'முத்தலாக்' முறையைச் சட்டப்படி தடை செய்ய வேண்டும் என்று முடிவெடுத்துள்ளது.

முத்தலாக் முறை கூடாது என்பதில் நமக்கும் கருத்து வேறுபாடில்லை. இஸ்லாமியப் பெண்களும் அதனை எதிர்த்தே நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். ஆனால் அதனைச் சாக்காக வைத்துக் கொண்டு, பாஜக தன் கொடிய முகத்தை வெளிப்படுத்துகிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஏற்கனவே ஒரே மாதிரியான குடிமைச் சட்டம் (Uniform civil code) கொண்டுவர முயன்று இன்றைய மத்திய அரசு தோற்றது. இப்போது முத்தலாக் என்பதை பிடித்துக் கொண்டு சிறுபான்மையினரை நசுக்க முயல்கிறது.

மணமுறிவு (விவாக ரத்து) என்பது குடிமைச் சட்டத்தின் (civil law) கீழ் வரும் ஒன்று. இந்து, கிறித்துவர்களுக்கு அப்படித்தான் உள்ளது. இப்போது இஸ்லாமியர்களுக்கு மட்டும் அதனைக் குற்றவியல் சட்டத்தில் (Criminal law) கொண்டுவர முயல்கிறது இந்திய அரசு. முத்தலாக் சொன்னால் அது சட்டப்படி செல்லாது என்று சொல்லிவிட்டால் போதாதா? அதனைக் குற்றமாக்கி, மூன்று ஆண்டுகள் வரையில் சிறைத் தண்டனை என்றால், என்ன நியாயம்?

இந்த ஒருதலைப்பட்சமான சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதில் அவசரம் காட்டாமல், நிதானமாக முடிவெடுக்க நிலைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்பதே சரியானது.

சாதிக்கு ஒரு நீதி பேசியவர்கள், இப்போது மதத்திற்கு ஒரு நீதி பேச முயல்கின்றனர். இதனை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்!

## புத்தக விழா



**02.01.2018** அன்று தஞ்சையில் நடைபெற்ற வேர்ட்ஸ்வொர்த் புத்தகத் திருவிழா மேடையில், சுப.வீரபாண்டியன், எஸ்.எஸ்.ராஜ்குமார், பெரியார் செல்வன் உள்ளிட்டோர்.



# தொழிலாளர்களின் போரட்டம் அரசின் தள்ளாட்டம்?

தமிழக மக்கள் அன்றாடப் பணிகளில் நிலைகுலைந்து போய் இருக்கிறார்கள். போக்குவரத்துத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தால் மாநிலம் முழுவதும் அரசு பேருந்துகள் முடங்கிக் கிடக்கின்றன.

13ஆவது ஊதியக் குழுப் பரிந்துரையை நடைமுறைபடுத்த வேண்டும். ஏனைய பொதுத் துறை தொழிலாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும். ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கான நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும் – இவைதான் போராடும் தொழிலாளர்களின் வேண்டுகோள்.

இதே வேண்டுகோளை வைத்துச் சென்ற ஆண்டு இவர்கள் போராடினார்கள். இவர்களின் கோரிக்கையை ஏற்ற அ.தி.மு.க. அரசு இதுவரை சிறு துரும்பைக் கூட அசைக்கவில்லை.

இப்போதைய போராட்டத்தில் 21 தடவைகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியும் உடன்பாட்டுக்கு வராத அரசை எதிர்த்துப் போராடத் தொடங்கியிருக்கிறார்கள்.

போக்குவரத்துத் துறையில் 10 ஆண்டுகளுக்குக் குறைவாக பணிபுரியும் ஓட்டுநர்களின் ஊதியம் தர ஊதியத்துடன் ரூ.14,500. இவர்களுக்கு அரசு தருவதாகச் சொல்லும் ஊதிய உயர்வு 2.44 சேர்த்தால் ஊதியம் ரூ16,500 ஆக இருக்கும்.

இதே தகுதியுடைய அரசுத் துறை பிற ஓட்டுனர்களின் சம்பளம் ரூ.19,500. இதற்கு இணையாக அதாவது 2.57 ஊதிய உயர்வு கேட்கிறார்கள் போக்குவரத்து தொழிலாளர்கள்.

அதோடு போக்குவரத்து ஊழியர்களின் ஓய்வூதியத் தொகை 7 ஆயிரம் கோடியை வைத்துக் கொண்டு அதைத் தவணை முறையில் தருவதாக அரசு சொல்கிறது.

இவைகளினால் ஏற்பட்ட தொழிலாளர்களின் கோபம் போராட்டமாக இன்று மாநிலம் முழுவதும் எரிந்துகொண்டிருக்கிறது.

துறை சார்ந்த அமைச்சர் விஜயபாஸ்கர் பிரச்சனைக்குத் தீர்வு காண முனைவதை விட்டுவிட்டுத் தொழிலாளர்களை மிரட்டும் வகையில் பேசிக்கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் இந்தப் போராட்டத்தைத் தடை செய்து மதுரை உயர்நீதிமன்றக் கிளை ஆணையிட்டிருக்கிறது.

போராட்டக் காரர்கள் பணிக்குத் திரும்ப வில்லை என்றால் அவர்கள் மீது இடைநீக்கம், பணிநீக்கம் போன்ற ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் நீதிமன்ற ஆணை வலியுறுத்துகிறது.

தொ.மு.ச, சி.ஐ.டி.யு உள்ளிட்ட 17 தொழில் சங்கங்கள் ஒன்று கூடி, நீதிமன்றம் அரசு சொன்னதை மட்டுமே கேட்டுக்கொண்டு, எங்கள் தரப்பு நியாயங்களைக் கேட்காமல் தீர்ப்பு வழங்கியிருப்பது ஏற்கத்தக்கது இல்லை என்று கூறி போராட்டத்தைத் தொடர்கின்றார்கள்.

எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக்களை மாவட்டம் தோறும் நடத்தி அரசுப் பணத்தை வீணடிக்கும் இந்த அ.தி.மு.க. அரசு, போக்குவரத்துத் தொழிலாளர்களின் நியாயமான வேண்டுகோளை நிறைவேற்றாமல் “அரசு கஜானாவில் பணம் இல்லை” என்று சொல்வது ஆளத் தகுதியற்ற அரசுதான் இது என்பதை உறுதி செய்கிறது.

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு” – என்கிறார் திருவள்ளுவர்.

இது தொழிலாளர்களின் உரிமைப் போராட்டம்! மக்களின் வாழ்க்கை போராட்டம்! அரசுக்கோ பெரும் தள்ளாட்டம்! ●

● எழில்.இளங்கோவன்

# ‘காவி’ மருத்துவ ஆணையம்?

மாநிலங்களின் உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது, மோடியின் காவி பா.ஜ.க. அரசு.

29.12.2017 அன்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி.நட்டாவாலால் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்ட ‘தேசிய மருத்துவ ஆணைய’ மசோதா, எதிர்கட்சிகளின் கடும் எதிர்ப்பால் நிலைக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1933ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசால் கொண்டுவரப்பட்ட ‘இந்திய மருத்துவ ஆணையம், 1956இல் திருத்தங்கள் செய்யப்பட்டு இதுவரை சரியாகவே இயங்கி வருகிறது.

ஆனால் மோடி அரசின் நிதி ஆயோக் என்ற அமைப்பின் பரிந்துரையை ஏற்று, பழமை வாய்ந்த இந்திய மருத்துவ ஆணையத்தைக் கலைத்துவிட்டு, அதற்குப் பதிலாகத் தேசிய மருத்துவ ஆணையம் அமைக்க முயல்கிறது. இந்த ஆணையத்திற்கு உறுப்பினர்கள் ஐவரும் , அரசு சாரா உறுப்பினர்கள் 12 பேரும் நியமன உறுப்பினர்கள் என்கிறது மசோதா.

அதாவது மருத்துவ ஆணையத்தின் நிர்வாக உறுப்பினர்கள் மருத்துவர்கள் இல்லாமல், பா.ஜ.க – ஆர்.எஸ்.எஸ். போன்ற காவிகளை நியமிக்க இருக்கிறார்கள் என்பது இங்கே இலை, காய் மறைவு.

இது கல்வியில் காவியைப் புகுத்தும் அப்பட்டமான ஒரு சார்பு மத அடையாளம்.

ஏற்கனவே வணிக மயமாகிக் கொண்டிருக்கும் மருத்துவத் துறையும் மருத்துவக் கல்வியும் தனியார் பெரு நிறுவனங்களின் கைகளில் சிக்கவைக்க இது வழிவகை செய்யும்.

பிற நாட்டு மருத்துவர்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவைகள் நேரடியாக நுழைவதைத் தடுத்துக்கொண்டிருக்கும் இந்திய மருத்துவ ஆணையத்தை கலைத்துவிட்டு, அவைகளில் ஆதிக்கத்திற்கு வழிவகை செய்யவே இந்த தேசிய மருத்துவ ஆணையம்.

நீட் தேர்வின் மூலம் ஏழைக் கிராமப்புற மாணவர்கள் எப்படி மருத்துவக் கனவைப் பறிகொடுத்தார்களோ அப்படித்தான் இந்த தேசிய மருத்துவ ஆணையமும் ஏற்படுத்தும்.

அத்துடன் பல்வேறு வழிகளில் மாநில அரசுகளின் உரிமைகளைப் பறித்துவரும் மோடி அரசின் இந்தத் தேசிய மருத்துவ ஆணைய மசோதாவால், மாநிலங்களின் மருத்துவக் கல்வி மருத்துவத் துறை உரிமைகள் போன்றவைகள் அனைத்தும் மாநில அரசுகளின் பிடியில் இருந்து மத்திய அரசின் கீழ் பறிபோகும், எதிர்காலத்தில்.

தமிழக ஆளுநர் கோவை, கன்னியாகுமரி என்று மாவட்டங்களுக்குச் சென்று இல்லாத குப்பைகளை, இருப்பதைப் போலப் போட்டுக்காட்டி கூட்டுவதும், மக்களின் மனுக்கள் வாங்குவதும், மாநில உரிமைகள் மீது தலையிடும் செயல்.

இதை மாநில எடப்பாடி அரசு கூனிக்குறுகி பார்த்துக் கொண்டிருக்கிறது. தமிழக ஆளும் கட்சிக்கு மக்களின் உரிமை, மாநில உரிமை பற்றியெல்லாம் கவலையே இல்லை.

பழம்பெரும் நிறுவனமான இந்திய மருத்துவ ஆணையத்தைக் கலைப்பதற்கும், தேசிய மருத்துவ ஆணையத்தை அமைப்பதற்கும் எதிராக எதிர்க்கட்சிகள் எழுச்சியுடன் போராடுகின்றன, அ.தி.மு.க.வைத் தவிர.

பா.ஜ.க. அரசின் இத்தகைய தலை கனத்த அதிகார ஆணவத்தைக் கடுமையாக எதிர்த்துப்போராட, ஒரு மாபெரும் மக்கள் எழுச்சி ஏற்பட்டால்,

பாசிசம் வீழும், ஜனநாயகம் தழைக்கும்●

# எங்கே நீயோ, நானும் அங்கே... உன்னோடு




சிவதி

**எவர் நோட்**

சென்னை, சைதாப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ திடல்., சென்னை புத்தகக் காட்சியின் அரங்கில் இறையன்பு 'தலைமைப் பண்பு' குறித்து பேசிக்கொண்டு இருந்தார். பத்து பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒரு கதையைக்கூறி அற்புதமாக முடிந்த உரை அது. இறையன்பின் தனித்துவம் என்பது பல்வேறு நூல்களில் இருந்து எடுத்துத் தொடுக்கப்பட்ட அற்புதமான மேற்கோள்கள் உள்ளடக்கிய தெள்ளிய நீரோடை போன்ற சிறப்பான பேச்சு நடை. அதை கேட்டுக்கொண்டு இருந்த வேளையில் நான் எங்கே, எந்த நிலையில் உட்கார்ந்து கொண்டு இருந்தேன் என்பதையே மறந்த அற்புதமான மாலைப்பொழுது அது.

ஐந்தாறு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. அவர் சொன்னவை பட்டும் படாமலும் நினைவில் இருந்தது. நினைவில் நின்ற அருமையான உரைகளின் சுருக்கத்தை எப்போதும் என் மகளிடம் பகிர்வது என்னுடைய வழக்கம். ஒரு குறிப்புக்காக அந்த ஒலிப்பதிவினை தேடியபோது கிடைக்கவில்லை. ஆனால் அந்த மேடைப்பேச்சினை நான் பதிவு செய்த ஞாபகம் மட்டும் நினைவில் இருக்கிறது.

ஆனால் அதன் பிறகு ஐந்தாறு மொபைல் ஃபோன்கள் மாற்றிவிட்டேன். பழைய கைபேசியில் இருந்த எந்த பதிவுகளும் தற்போது என்னிடத்தில் இல்லை. முதன்மையான ஒலிப்பதிவுகளை எப்போதும் எவர்நோட்டில் பதியும் ஒரு பழக்கம் அப்போது எனக்கு இருந்தது.

கணினியில் எவர் நோட்டை நிறுவி தேடிப்பார்க்கிறேன். இறையன்பு அவர்களின் உரைவீச்சு மட்டுமல்ல, நான் தொழிற்சங்கத்திற்காக சில ஆண்டுகளுக்கு முன்பு வரைந்த அனைத்து கார்ட்டூன்களையும் மீட்டெடுத்தேன். காணாமல் போன குழந்தையைத் தொட்டு அணைத்து உச்சி முகர்ந்த இன்பத்தை அடைந்தேன். தோழர்களே உங்களிடத்தில் அந்த வழிமுறையினை சொல்லாமல் போய்விடுவேனா என்ன?

அப்படி என்னதான் இருக்கிறது எவர்நோட்டில். எங்கேயும் எப்போதும் ஓர் உற்றத் துணைவன் உடன் இருந்தால் எப்படி இருக்கும். அந்தத் துணைவனுக்கான பணியைத்தான் செய்கிறது இந்த எவர் நோட் (Evernote) .

இந்த செயலியினை பிளே ஸ்டோர் சென்று நிறுவிக்கொண்டால் போதும். உங்கள் மின்னஞ்சல் முகவரியும், ஒரு கடவுச்சொல்லையும் வைத்து உள்ளே நுழையலாம். ஓர் அற்புதமான செயலி நமக்கு கிடைத்து விட்டது என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

முக்கிய ஆவணங்கள், நிழற்படங்கள், உங்கள் கைப்பிரதிகள், பட்டியல்கள் என எது வேண்டுமானாலும் இதில் சேமித்து வைத்துக் கொள்ளலாம். ஒரு அங்காடியில் ஒரு பொருள் வாங்குகிறீர்கள். பொருளுக்கான பட்டியல் உங்களுக்கு முக்கியமாகத் தெரிகிறது என்பதாக வைத்துக் கொள்வோம். இதனை கைபேசி கேமராவைக் கொண்டு ஒரு க்ளிக் செய்தால் போதும். ஒரே சொடக்கில் உங்கள் மொபைலுக்கு வந்துவிடும்.

ஒரு அற்புதமான கருத்தரங்கில் கலந்து கொள்கிறீர்கள், அங்கே உங்கள் மனம் கவர்ந்த தலைவர் பேசிக்கொண்டு இருக்கிறார். குறிப்பெடுக்க நேரமில்லை என்ற கவலையெல்லாம் இனியில்லை. கைப்பேசியில் இருக்கும் எவர் நோட் செயலி வழியே ஒரே சொடக்கு. அனைத்தும் உங்கள் கைகளில். நீங்கள் பாதுகாக்க வேண்டிய ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணம், குறிப்புகள், நிழற்படங்கள் என அனைத்தையும் பல்வேறு ஃபோல்டர்கள் வழியே சேமித்து வைத்துக்கொள்ளலாம். மைக்ரோசாப்ட் வேர்டு, எக்செல், பவர்பாய்ன்ட் என எந்த வகை ஆவணமாக இருந்தாலும் இதில் சேமிக்க முடியும்.

இது ஒன்றும் பெரிய வியப்பு இல்லை, இது சாதாரண திறன்பேசியிலேயே சாத்தியம் தானே என நீங்கள் நினைக்கலாம். சாதாரணமாக திறன்பேசியில் சேமிப்பதின் மூலம் அவை பல்வேறு இடங்களில் ஆங்காங்கே நிரம்பிவிடும். எதை எங்கே சேமித்தோம் என்பது நமக்கே சில நேரங்களில் குழம்பிவிடும். இந்த செயலியின் உதவியால் அனைத்தும் ஒரே இடத்தில், அதுவும் நாம் விரும்பும் தலைப்பின் கீழ் தொகுக்கப்பட்டு இருப்பதைக் காணலாம்.

சிறப்பான செய்தி என்னவெனில், நீங்கள் எந்த ஆவணத்தை சேமித்தீர்களோ அதனை உங்கள் கணினி வழியே நொடிப்பொழுதில் பெறலாம். ஆம், கணினியில் சேமிப்பதைத் திறன்பேசியிலும், திறன்பேசியில் சேமிப்பதைக் கணினியிலும் எளிதில் ஒத்திசைவு ஆகிவிடும். எனவே நீங்கள் எங்கு சென்ற போதும் உங்கள் ஆவணம் கூடவே வரும். ஒன்றுக்கும் மேற்பட்ட உபகரணத்தில் ஒரே நேரத்தில் சேமித்து வைக்கலாம்.

திடீரென உங்கள் திறன்பேசி தொலைந்து போனாலோ, அல்லது சேதமடைந்தாலோ இனி நீங்கள் அச்சமோ, கவலையோ கொள்ளத்தேவையில்லை. பயனர் சொல்லையும் கடவுச்சொல்லையும் இட்டால் போதும். நீங்கள் மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனாக துள்ளிக் குதிப்பீர்கள்.

மேம்படுத்தப்பட்ட பதிப்பில் இன்னும், இன்னும் கூடுதல் வசதிகள் தருகின்றனர். அதற்கு நாம் இந்த செயலிக்கு கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். பொதுவாக இந்த செயலி, பல முதன்மையான செய்திகள் தன்னகத்தே எப்போதும் இருக்க வேண்டும் என நினைப்பவர்களும், எழுத்தாளர்கள், செய்தியாளர்கள், ஊடகப்பிரிவைச் சார்ந்தவர்கள், ஆய்வாளர்கள் என நிச்சயம் தங்கள் திறன்பேசியில் வைத்திருக்க வேண்டிய செயலியாகும்.

பல மில்லியன் பேர் இதனைத் தரவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர். எப்போதும் இணைய இணைப்பில் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இதனை Offline லும் பயன்படுத்தலாம். எப்போது இணையத்தை நீங்கள் இணைக்கிறீர்களோ அப்போது இதுவாகவே ஒத்திசைவு ஆகி உங்கள் பதிவுகள் பாதுகாக்கப்படும்.

இடைத்தேர்தல் இருபது ரூபாய் நோட்டை நீங்கள் வைத்திருந்தால் அது உங்களுக்குப் பயனளிக்குமா என்பதெல்லாம் எனக்குத்தெரியாது. ஆனால், இந்த எவர்நோட் செயலி உங்களிடத்தில் இருந்தால் உங்கள் தனிச்செயலர் போல உங்களுக்கு அவசர நேரத்தில் உதவும் என்பதில் ஐயமேதுமில்லை.

இந்த செயலியினைத் தரவிறக்கம் செய்ய இங்கே சொடுக்கவும். https://play.google.com/store/apps/details?id=com.evernote&hl=en

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.